# ஜீலை 20 - புனித ஜேன் (Of Valois) (1466-1505)




இவள் பிரான்ஸ் நாட்டின் 11-ஆம் லூயிஸ் மன்னரின் மகள். இவள் ஊனமான உடலுடன் பிறந்தாள். எனவே தந்தை இவளைத் தள்ளிவிட்டார். கைவிடப்பட்ட ஓர் அரண்மனையில் இவளை வளர்த்து வந்தார்கள். ஒரு பிரபுவை மணக்கும்படி இவளை வற்புறுத்தினார்கள். இணங்கி அவரை மணந்துகொண்டாள். பின்னர் அந்த பிரபு 12-ஆம் லூயிஸ் என்னும் பெயருடன் பிரான்ஸ் நாட்டின் அரசனானான். அரியணையில் ஏறியதும் அவன் விவாகரத்து செய்து கொண்டான். “கட்டாயத்தின்மேல் அவள் என்னை மணந்தாள். எனவே இந்தக் கல்யாணம் செல்லாது” என்று அவன் கூறி இன்னொருத்தியை மணந்து கொண்டான். இவ்விதம் பதவியிலிருந்து இறக்கப்பட்ட அரசி ஒரு சிறிய மாகாணத்தின் அரசியானாள். தனது குடிகளை நன்கு நடத்தி வந்தாள். 1550-ஆம்ஆண்டில் இவள் ஒரு கன்னியர் சபையை ஏற்படுத்தினாள். கன்னியர்கள் செபிக்க வேண்டும். தவம் செய்ய வேண்டும். சுவிசேஷத்தில் கூறப்படும் புண்ணியங்களை அனுசரிக்க வேண்டும். தன் வாழ்நாளின் இறுதியில் ஜேன் அந்த மடத்தில் சேர்ந்து துறவி ஆனாள்.

சிந்தனை: வாழ்வில் எந்த நிலையில் இருந்தாலும் புனிதராகலாம்.

செபம்: ஆண்டவரே, நாங்கள் தவிர்க்க முடியாத துன்பங்களையாகிலும் பொறுமையுடன் சகிக்கும் வரம் தாரும்.